# பாரதிய ஜனதா கட்சி
# 11,அசோகா சாலை,புதுடெல்லி 110 001

**<u>பாஜகவின் தேசிய செய்தித் தொடர்பாளர் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர் ப்ரகாஷ் ஜாவேத்கர் விடுத்த செய்தி அறிக்கை</u>**

ஐக்கிய முற்போக்குக் கூட்டணி அரசின் ஆட்சியில் மற்றொரு நிதி முறைகேடுகள் சார்ந்த ஊழல் குற்றச்சாட்டு வெளிச்சத்துக்கு வந்துள்ளது. விவசாயிகளின் கடன்ரத்து திட்டத்தில் கடன்ரத்துக்குத் தகுதியான 24 லட்சம் விவசாயிகள் விடுபட்டிருப்பதும், தகுதியற்ற 24 லட்சம் விவசாயிகள் பயன்பெற்றிருப்பதாகவும் குற்றச்சாட்டுகள் வெளியாகியுள்ளன. க மத்திய தலைமைக் கணக்குத் தணிக்கை குழு வெளியிட்டுள்ள அறிக்கை இந்த முறைகேட்டை அம்பலப்படுத்தியுள்ளது. இந்த விவகாரம் தொடர்பாக உடனடி விசாரணை ஒன்றை மத்தியப் புலனாய்வுத் துறை தொடங்கி இந்த ஊழல் விவகாரத்தின் பரிமாணத்தை ஆராய பாஜக கோருகிறது.

விவசாயிகள் கடன் ரத்து திட்டம் தொடர்பான 3.5 கோடி கணக்குகளில் மத்திய தலைமை கணக்குத் தணிக்கைக் குழு 90 ஆயிரம் கணக்குகளை மட்டுமே பரிசோதனை செய்து பார்த்துள்ளது. இந்த சிறிய மாதிரி ஆய்விலேயே, கடன்ரத்துக்குத் தகுதியான 13 சதவீத விவசாயிகள், கடன் அளித்த நறுவனங்களால் புறக்கணிக்கப்பட்டிருப்பது தெரியவந்துள்ளது. இதுபோக கடன்ரத்துக்குத் தகுதியற்ற 8.5 சதவீதம் விவசாயிகள் இந்த கடன்ரத்து திட்டத்தின் மூலம் கொள்ளை லாபத்தை அடைந்துள்ளனர். இவர்களில் நிறையபேர் விவசாயிகளாகவே இல்லாமல் இருப்பதற்கும் வாய்ப்புகள் உண்டு. இந்த கடன்ரத்து திட்ட அமலாக்கம் தொடர்பாக முழுமையாக கணக்குகளை ஆராயும் பட்சத்தில் புறக்கணிக்கப்பட்ட தகுதியான விவசாயிகளின் எண்ணிக்கையும், கடன்ரத்து செய்யப்பட்ட தகுதியற்ற விவசாயிகளின் எண்ணிக்கையும் உயர்வதற்கே அதிக

வாய்ப்புகள் உள்ளன. இந்நிலையில் மார்ச் 31,2013 ஐ வரம்பாக வைத்து, தகுதியான விவசாயிகளின் கடன்களை ரத்து செய்ய வேண்டும் என்று பாஜக கோருகிறது.

காங்கிரஸ் என்றாலே ஊழல் என்னும் அளவுக்கு நிலைமை போய்விட்டது. காமன்வெல்த், 2ஜி அலைக்கற்றை, சுரங்க ஒதுக்கீடு, சாப்பர் விமான பேரத்தைத் தொடர்ந்து விவசாயிகள் கடன் ரத்து திட்டத்திலும் அரசு கருவூலத்திலிருந்து தகுதியற்ற நபர்கள் பலன்பெற்றுள்ளது தெரியவந்துள்ளது.

வட்டிக்கு கடன் வழங்குபவர்களிடமிருந்து பெறப்பட்ட சிறிய மற்றும் பின்தங்கிய நிலையில் உள்ள விவசாயிகளின் கடனை ரத்து செய்வதற்காக உருவாக்கப்பட்ட திட்டத்தால் உண்மையிலேயே பலன் பெற வேண்டியவர்கள் பலன்பெறவில்லை. 1997 க்குப் பிறகு கடன் வாங்கிய சிறிய மற்றும் பின்தங்கிய விவசாயிகளின் கடன்களை ரத்து செய்திருக்க வேண்டும். அவர்களில் பலரும் தங்கள் கடனை திரும்ப கட்டுவதற்கு பல சிரமங்களை எதிர்கொண்டிருக்கின்றனர். இதில் அதிர்ச்சிகரமான அம்சம் என்னவெனில் தகுதியற்ற நுண்கடன் அமைப்புகளில் சிலவும் இதில் பயன்பெற்றுள்ளன. ஆவணங்களை மாற்றுதல், திருத்தி எழுதுதல், ஆவணங்களில் போலியாக மாற்றங்கள் செய்தல் என்று பல விதமான முறைகேடுகள் இத்திட்டத்தில் நடந்துள்ளதை மத்திய தலைமைக் கணக்குத் தணிக்கை குழு கண்டுபிடித்துள்ளது. தகுதியற்ற பயனாளிகளுக்கு அரசுப்பணம் சென்றுள்ளது. அத்துடன் தகுதியான ஆறு சதவீதம் விவசாயிகளுக்கு இத்திட்டத்தின் பலன்கள் மறுக்கப்பட்டுள்ளன. கடன் ரத்து சான்றிதழ்கள் கொடுக்கப்படாததால் புதிய கடன்களை வாங்குவதில் விவசாயிகள் சிக்கல்களை சந்தித்துவருகின்றனர். இப்படியாக விவசாயிகள் எதிர்கொள்ளும் சிரமங்களுக்கு யார் பொறுப்பு என்பதை விசாரிக்க பாஜக கோருகிறது. அத்துடன் இந்த முறைகேடுகளில் ஈடுபட்ட குற்றவாளிகள் மீதும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

கடன் ரத்து போன்ற திட்டங்களைத் தாண்டியும் விவசாயிகள் துயரங்கள் அதிகரித்துக் கொண்டே வருகின்றன. விவசாயிகளின் தற்கொலை நிகழ்வுகள் பெருகிவருகின்றன. வேளாண்மையைச் செய்வதில் ஆகும் செலவுகள் அதிகப்படியாக மாறுகின்றன. உரங்கள், பூச்சிக்கொல்லிகள், விதை, நீர், மின்சாரம் மற்றும் டீசல் போன்ற இடுபொருட்களின் விலை அதிகரித்துள்ளன. விளைபொருட்களுக்கு கிடைக்கும் விலையை ஒப்பிடும் போது, உற்பத்தி செலவு கட்டுப்படியாகாத நிலையில் உள்ளது. ஐக்கிய முற்போக்குக் கூட்டணி ஆட்சியில் வேளாண்மை வர்த்தகம் சார்ந்த கொள்கைகள் விவசாயிகளுக்கு எதிராக மாறிவிட்டன. உற்பத்தி செலவை விட 50 சதவீதம் கூடுதல் விலையை நிர்ணயித்து விவசாயிகளுக்கு வேளாண்மையைப் பலனுள்ளதாக்கும் சுவாமிநாதன் ஆணையத்தின் பரிந்துரைகளை அரசு ஏற்கவேண்டும் என்று பாஜக கோருகிறது.

(ராம் கிருபால் சின்ஹா)

செயலர், பாஜக நாடாளுமன்றக் கட்சி